திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு மாநில எல்லைகளில் இன்னும் சர்வே நடந்து கற்கள் நடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்தனை ஆண்டுகள் ஆகியும் காலதாமதமாக அந்தப் பணி நடைபெறுவானேன்? சில இடங்களில் கல்லை நட்டபிறகு எடுத்து விடுகிறார்கள், பிறகு மறுபடியும் அளந்து தான் கல் நடப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றதே, அந்தக் கற்கள் எல்லாம் எடுக்கப்பட முடியாத அளவுக்கு மிக உறுதியான முறையிலே அமைக்கக்கூடாதா? அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட முடியாமல் உறுதியான அளவுக்கு நடுவது எப்படி என்பது தெரியவில்லை. எப்படி நட்டாலும் எடுத்து விடுவார்கள். பல இடங்களில் எடுக்கப் பட்ட செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இவைகளையெல்லாம் சரிபார்க்க, இரண்டு அரசுகளும் சேர்ந்து அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று முடிவெடுக்கப் பட்டு அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லை நிர்ணயிப்பதில், ஏற்கனவே தமிழ்நாட்டைச் சேர்ந்த திருப்பதி விடப்பட்டிருக்கிறது. அதனை மீட்க அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற கேள்வியே வரையறுக்கப்பட்ட எல்லைகளைச் சர்வே பார்ப்பது மட்டுமே அல்லாமல், புதிய எல்லைகளை மாற்றி அமைக்கின்ற கேள்வி இப்பொழுது எழ வில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் நிதி உதவி

*வினா எண் 521—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

படிக்கும்போது இறக்க நேரிடும் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சாங்ஷன் ஆன ஸ்காலர்ஷிப் தொகையை அவர்களது பெற்றோரிடம் கொடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால், 1979–80, 1980-81 ஆகிய இரு ஆண்டுகளிலே பெரம்பலூரில் இறந்துபோன மாணவர்களின் உதவித் தொகை அவர்கள் முழு ஆண்டு படித்தும், இறந்தபிறகும் கூட அவர்களுடைய பெற்றோர்களிடம் தரப்படாமல் இருந்தது என்பதை அமைச்சர் அறிவாரா?

1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைக் குறிப்பாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்னைகள் பல்வேறு பள்ளிகளிலும் இருப்பதால் இதை அமைச்சர் ஆராய்ந்து எல்லா பள்ளிகளுக்கும் உகந்த வகையில், இறந்து போனாலுங்கூட அந்த ஸ்காலர்ஷிப் பெற்றோர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு அனுப்புமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிமக்கள் நலத்துறை இயக்குநர் ஆகியோர் செய்ய வேண்டிய காரியம். அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்க வேண்டும். கொடுக்கவில்லையென்றால் என்னு டைய கவனத்திற்கு கொண்டு வந்தால் ஏன் கொடுக்கப்பட வில்லையென்று கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இப்பொழுதே அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லித்தான் நாம் ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

சென்னை கன்னிமாரா பொது நூலகம்

*வினா எண். 522—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தின் நிர்வாக ஒழுங்கீனம் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்தனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; (அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவைகள் பொதுநூலக இயக்குநருக்கு அனுப்பப்பட்டன. அதில் குறிப்பிடப் பட்டுள்ள குறைகள் களையப்பட்டு, நூலகம் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூலகத்தில் புத்தங்களைக் கையெழுத்து போடாமல் நிர்வாகம் கொடுப்பதும், புத்தங்கள் சரியாக வரிசைக் கிரமமாக அடுக்கப் படாமல் இருப்பதும் ஆகிய புகார்கள் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. பல்வேறு புகார்கள், கடிதங்கள் தொடர்ச்சியாக வந்ததன் காரணமாக, கன்னிமாரா பொது நூலகத்தில் கீழ்க் காணும் நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். 1. நூலகத் திற்கு வருகை புரியும் வாசகர்கள் தங்கள் கருத்துக்களை, குறைபாடுகளைத் தெரிவிக்கும்பொருட்டு, வாசகர்கள் கருத்தறியும் பெட்டி ஒன்று வைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட உள்ளது.